# முதியோர்களுக்கு
# முதியோர் இல்ல பராமரிப்பிற்கான
# தேசிய போசாக்கு தர நியமங்கள்

சுகாதார அமைச்சு

போசாக்கு பிரிவின் வெளியீடு

2020

சுகாதார அமைச்சு

**முதியோர்களுக்கு**
**முதியோர் இல்ல பராமரிப்பிற்கான**
**தேசிய போசாக்கு தர நியமங்கள்**

**ஆகஸ்ட் 2020**

ISBN 978-955-3666-85-7

**வெளியீட்டோர் :**

போசாக்கு பிரிவு,
சுகாதார அமைச்சு,
பொது சுகாதார கட்டிடத் தொகுதி,
555/5, எல்விட்டிகல மாவத்தை,
நாராஹென்பிட்டி

உலக சுகாதார அமைப்பின் தொழில்நுட்ப மற்றும் நிதி உதவியுடன் வெளியிடப்பட்டது

**அச்சிட்டோர் :–**

புதிய கருணாதர பதிப்பகம்
இல. 97, மாளிகாகந்த வீதி
கொழும்பு 10.

# சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகத்தின் செய்தி

உலகளாவிய ரீதியில், வயதுவந்தோரின் எண்ணிக்கையும் விகிதாச்சாரத்தையும் ஒப்பிட்டு நோக்கும் போது வயதான மக்கள்தொகையினர் இலங்கையில் அதி வேகமாக அதிகரித்து காணப்படுகின்றது, தற்போதைய முழுச் சனத்தொகையில் அண்ணளவாக 12.5% ஆன முதியோர்கள் காணப்படுகின்றனர். நாட்டின் சுகாதாரப் பராமரிப்பு செலவீனத்தில், முதியோருக்கான சுகாதாரம் மற்றும் போசாக்கு நிலை குறிப்பிடத்தக்க தாக்கத்தினை செலுத்துகின்றது.

நாட்டில் தற்போதைய பொருளாதார மற்றும் சமூக மாற்றங்களுடன் குடும்ப அமைப்பு குறிப்பிடத்தக்க மாற்றங்களைச் சந்தித்துள்ளது, இதன் விளைவாக முதியோர் பராமரிப்பு இல்லங்களில் வாழும் முதியோரின் எண்ணிக்கையும் அதிகரித்தள்ளது. இந்த முதியவர்கள் தங்கள் சொந்த வீடுகளில் வசிப்பவர்களை விட ஊட்டச்சத்து சிரமங்களுக்கு எளிதில் ஆளாகிறார்கள், எனவே நிறுவனமயமாக்கப்பட்ட முதியோருக்கான போசாக்குப் பராமரிப்பு சமூகத்துக்கு இன்னும் முக்கியமானது.

இந்த மக்கள்தொகையின் உணவு மற்றும் ஊட்டச்சத்து தேவைகள் வயது வந்தோரிடமிருந்து வேறுபடுகின்றன. அவர்கள் பல ஆண்டுகளாக தங்கள் உணவு பழக்கவழக்கங்களையும் உணவு முறைகளையும் மாற்றியிருக்கலாம். மேலும், உணவு உண்பதில் ஏற்படும் கோளாறுகள் வயதாவதனால் முதியோர்களில் ஏற்படும் பொதுவான சுகயீனங்களாகும். எனவே, பாதுகாப்பான உணவுச் சூழலில் தரமான ஊட்டச்சத்து பராமரிப்பு சேவைகளை வழங்க இந்த நலன் அக்கறைகள் அங்கீகரிக்கப்பட வேண்டும்.

உலக சுகாதார நிறுவனம் மற்றும் பிற தொடர்புடைய பங்குதாரர்களின் பங்களிப்புடன் சுகாதார அமைச்சின் போசாக்கு பிரிவினால் வடிவமைக்கப்பட்ட முதியோர் இல்லங்களில் பராமரிக்கப்படும் முதியோர்களுக்கான தேசிய போசாக்கு தர நியமங்கள் முதியோர் இல்லங்களில் வாழும் முதியோர்களின் ஊட்டச்சத்து பிரச்சினைகளை நிவர்த்தி செய்வதற்கான ஒரு முயற்சியாகும்.

நிறுவனமயமாக்கப்பட்ட முதியோருக்கான அத்தியாவசிய ஊட்டச்சத்து பராமரிப்பை வழங்க இந்த விரிவான வெளியீட்டைப் பயன்படுத்த பல்வேறு மட்டங்களில் உள்ள அனைத்து ஆதரவாளர்களையும் ஊக்குவிக்க விரும்புகிறேன்.

**வைத்தியர். அனில் ஜயசிங்க**
சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம்
சுகாதார அமைச்சு
இலங்கை.

# முன்னுரை

நாட்டில் நிகழும் மக்கள்தொகை மாற்றத்துடன் முதியோர்களின் எண்ணிக்கை எப்போதும் அதிகரித்து வருவதால், அவர்களின் போசாக்கு பிரச்சினைகளில் தலையீடு செய்வது ஒரு முக்கியமானதொன்றாக அங்கீகரிக்கப்படுகின்றன. வயதான மக்களுடன் ஒப்பீட்டு நோக்கும் போது முதியோர் பராமரிப்பு இல்லங்களில் வாழும் முதியோர்கள் போசாக்கு குறைபாட்டினால் பாதிக்கப்படுகின்றனர். எனவே முதியோர்கள் வாழும் முதியோர் இல்ல பராமரிப்பிற்கான தேசிய போசாகு தர நியமங்கள் சரியான நேரத்தில் அவர்களின் போசாக்கு பிரச்சினைகளை தீர்ப்பதற்கு இது முக்கியமானதொரு தேவையாக அங்கீகரிக்கப்பட்டது.

இதனுடன் தொடர்புடைய துறைகளில் பல பங்குதாரர்களின் பங்களிப்புடன் போசாக்கு பிரிவானது இந்த தேசிய போசாக்கு தர நியமங்களை உருவாக்கியது. இதனை அந்தந்த நிறுவனங்களால் பராமரித்து முன்னெடுக்கப்படவேண்டும். இந்த ஆவணங்கள் அனைத்து அரசு மற்றும் அரசு சாரா முதியோர் இல்ல பராமரிபபு நிறுவனங்களால் பயன்படுத்தப்படும் என எதிர்பார்க்கப்படுகின்றது. இங்கு வடிவமைக்கப்பட்டுள்ள போசாக்கு தர நியமங்களின் படி வயதானவர்களுக்கு தரமான போசாக்கு நிறுவுவதையும் பராமரிப்பதையும் உறுதிசெய்கிறது.

சுகாதார அமைச்சு, முதியோர் செயலகம், மற்றும் பிற அரசு மற்றும் அரச சார்பற்ற நிறுவனங்களின் தொடர்புடைய அனைத்து தொழிநுட்ப அதிகாரிகளின் மதிப்புமிக்க பங்களிப்பினை பெரிதும் பாராட்டுகிறோம் மேலும் இந்த ஆவணத்தை தயாரிப்பதற்கு தொழிநுட்பம் மற்றும் நிதியுதவி வழங்கிய உலக சுகாதார ஸ்தாபனத்தின் பங்களிப்பை மதிப்புடன் ஏற்றுக்கொள்கிறோம்.

சமூக மருத்துவப் பதிவாளர் வைத்தியர். கனிஷ்கா அத்துகோரலா, உதவி பணிப்பாளர் திரு. முருகேசு தர்மசீலன் மற்றும் திருமதி. சஜீவனி மிரிஹாகல்லா ஆகியோருக்கு சிறப்பு நன்றி தெரிவித்து போசாக்கு பிரிவின் ஊழியர்களுக்கு மனமார்ந்த பராட்டுக்கள்.


| | |
|---|---|
| **வைத்தியர். லக்மினி மாகோடரத்ன** | **வைத்தியர். சி. எம். பஸ்நாயக்க** |
| பணிப்பாளர் (செயல்) | தலைவர் - சமூக போசாக்கு பிரவு |
| சமூக மருத்துவ நிபுணர் | சமூக மருத்துவ நிபுணர் |
| போசாக்கு பிரிவு | தேசிய போசாக்கு தர நியமங்கள் |
| சுகாதார அமைச்சு | தயாரிப்பு ஒருங்கிணைப்பாளர் |

# உள்ளடக்கம்


சுகாதார சேவைகள் பணிப்பாளார் நாயகத்தின் செய்தி ........ iii

முன்னுரை ........ v

அறிமுகம் ........ 1

தேசிய போசாக்கு தர நியமங்களின் வளர்ச்சி செயல்முறை ........ 3

தேசிய போசாக்கு தர நியமங்கள் ........ 4

தர நியமம் 1: போசாக்கு ஆதரவு மற்றும் பராமரிப்பு சேவைகள் ........ 8

தர நியமம் 2: போசாக்கு பராமரிப்புத் திட்டம்/ங்கள் ........ 9

தர நியமம் 3: பாதுகாப்பான உணவுச் சூழல் ........ 10

தர நியமம் 4: உடற் பயிற்சிகள் மற்றும் பொழுதுபோக்குகள் ........ 11

தர நியமம் 5: சேவைகளுக்கான பின்னூட்டக் கருத்து ........ 12

தர நியமம் 6: மனித வளங்கள் ........ 13

தர நியமம் 7: நிறுவன ஆளுகை ஆட்சி ........ 14

சொற்களஞ்சியம் (Glossary) ........ 15

பின் இணைப்புகள் ........ 18

பங்களிப்பாளர்கள் ........ 25

தர நியமம் 1 போசாக்கு ஆதரவு மற்றும் பராமரிப்பு சேவைகள்

தர நியமம் 2 போசாக்கு பராமரிப்பு திட்டம்

தர நியமம் 3 உணவுச் சூழல்

தர நியமம் 4 உடற் செயற்பாடு மற்றும் பொழுதுபோக்குகள்

தர நியமம் 5 சேவைகள் பற்றிய கருத்து

தர நியமம் 6 மனித வளங்கள்

தர நியமம் 7 நிறுவன ஆளுகை

# முதியோர் இல்லங்களில் பராமரிக்கப்படும் முதியோர்களுக்கான தேசிய போசாக்கு தர நியமங்கள்

## அறிமுகம்

இலங்கையில் முதியோர்கள் சனத்தொகை அதிகமாக காணப்படுகின்றது. முதியோர்களில் பெரும்பாலோர் சமுதாயத்துடன் இணைந்து வாழ்வதுடன் மற்றும் சிலர் முதியோர் பராமரிப்பு இல்லங்களில் வாழ்கின்றனர். முதியோர்களின் வாழ்க்கை தரத்திற்கு உணவு மற்றும் போசாக்கு குறிப்பிடத்தக்க பங்களிப்பை வழங்குகின்றன, மேலும் இந்த முதியோர் இல்லங்களில் வசிப்போர்களின் உடல் மற்றும் செயற்பாட்டு தேவைகளை பூர்த்தி செய்வதில் பெரும் பொறுப்பை முதியோர் பராமரிப்பு இல்லங்கள் கொண்டுள்ளன.

இலங்கையில் முதியோர் இல்ல பராமரிப்பு வசதிகள் அளவு (சிறியது முதல் பெரிய இல்லங்கள் வரை) மற்றும் ஒரு மேலாண்மை அமைப்பு (அரசு, தனியார் அல்லது மருத்துவ இல்லங்கள்) ஆகியவற்றின் அடிப்படையில் பல்வேறு நிலைகளில் காணப்படுகின்றன. இது போன்ற பல நிறுவனங்கள் போதியளவு வளங்களை அனுபவிப்பதில்லை மற்றும் அங்கு வாழும் முதியோர்களுக்கு சரியான கவனிப்பு, பராமரிப்பு மற்றும் போசாக்கு ஆதரவினை வழங்குவதில்லை.

முதியோர் இல்லங்களில் வசிப்பவர்களின் ஆரோக்கிய நிலைக்கேற்ப தரமான பாதுகாப்பான சத்தான உணவை வழங்குவதே தேசிய போசாக்கு தர நியமங்களின் நோக்கமாகும். முதியோருக்கான உணவு மற்றும் போசாக்கு தேவைகளை மதிப்பீடு செய்வதற்கும் முதியோர் இல்லங்களில் வசிப்பவர்களின் தேவைகளை பூர்த்தி செய்வதற்கான போசாக்கு பராமரிப்பு திட்டங்கள் மற்றும் ஆதரவு சேவைகளை மதிப்பீடு செய்வதற்கும் அவர்களுக்கான உணவு மற்றும் போசாக்கு தேவைகளை நிவர்த்தி செய்வதற்கான பராமரிப்பு வழங்குநர்களுக்கு பொருத்தமான அறிவு மற்றும் திறனுடன் செயலாற்றுவதற்கும் இந்த ஆவணத்தில் பரிந்துரைக்கப்பட்டுள்ளது.

இந்த தர நியமங்கள் முதியோர் இல்லங்களில் வசிப்பவர்களினதும் மற்றும் முதியோர்களுக்கான பிற வதிவிட பராமரிப்பு இடங்களில் (நாள் மையங்கள், மருத்துவ இல்லங்கள் போன்றவை) வசிப்பவர்களினதும் போசாக்கு மற்றும் போசாக்கு தொடர்பான ஆரோக்கிய விளைவுகளிலும் கவனம் செலுத்துகின்றன. இந்த தர நியமங்கள் முதியோர் இல்ல குடியிருப்பாளர்கள் மற்றும் அவர்களது குடும்ப உறுப்பினர்களால் எதிர்பார்க்கப்படும் போசாக்கு பராமரிப்பு மற்றும்

சேவைகளின் அளவை பிரதிபலிக்கின்ற அதேவேளை நிறுவனத்தின் பொறுப்புகளை எடுத்துக்காட்டுகின்றன.

முதியோர் இல்லங்களில் வசிப்பவர்களின் ஆரோக்கிய நிலைக்கு ஏற்ப தரமான, பாதுகாப்பான, சத்தான போசாக்கு உணவை வழங்க இந்த ஆவணம் வழிகாட்டுதலை வழங்குகின்றது. முதியோர்களின் போசாக்கு மட்டத்திற்கு மறைமுக பங்களிப்பு செய்யும் காரணிகளான உடல் செயற்பாடு, சமூக மற்றும் உளவியல் அம்சங்கள் போன்றன இந்த ஆவணத்தில் முதியோர் பராமரிப்பு இல்லங்களில் வசிப்போர்களின் வாழ்க்கை தரத்தை சாதகமாக முன்னெடுப்பதற்கு உதவுகின்றது.

# தேசிய போசாக்கு தர நியமங்களின் வளர்ச்சி செயல்முறை

**இந்த நியமங்களின் வளர்ச்சியில் உள்ளடக்கியுள்ளவை :**

**நிலை 1**

போசாக்கு தர நியமங்களுடன் தொடர்புடைய உலகளாவிய மற்றும் உள்ளூர் இலக்கியங்களின் ஆய்வு

**நிலை 2**

போசாக்கு தர நியமங்களின் வரைவு மாதிரிகளை உருவாக்குதல்

**நிலை 3**

**தொழில்நுட்ப பணிக்குழுவுடன் நிபுணர் ஆலோசனை செயல்முறை**

தொழில்நுட்ப பணிக்குழுவில் போசாக்குப் பிரிவு, இளைஞர்கள், முதியவர்கள் மற்றும் அங்வீனமுற்றோர், மலையக மற்றும் நகர்ப்புற சுகாதார பிரிவு, மருத்தவ ஆராய்ச்சி நிறுவனம், சுகாதார மேம்பாட்டு பணியகம், முதியோர் செயலகம், இலங்கை தரநிலை கட்டளைகள் நிறவனம், இலங்கை மருத்துவ போசணைவியளாலர் சங்கத்தின் பிரதிநிதிகள், அரச மற்றும் அரச சாரா முதியோர் இல்லங்களின் முகாமையாளர்கள் போன்ற நிபுணர்களை கொண்டிருந்தது.

**நிலை 4**

தேசிய போசாக்கு தர நியமங்களின் வரைவு மாதிரி திருத்தியமைக்கப்பட்டது

**நிலை 5**

தேசிய போசாக்கு தர நியமங்களின் திருத்தியமைக்கப்பட்ட வரைவு மாதிரியின் முன்னோடிப் பரிசோதனை முதியோர் இல்ல பராமரிப்பு நிறுவனங்களின் முகாமையாளர்கள் மற்றும் இல்ல காப்பாளர்களின் (தர்மகத்தாக்கள்) மத்தியில் செய்யப்பட்டது.

**நிலை 6**

தொழில்நுட்ப பணிக்குழுவுடன் ஒருமித்த இணக்கப்பாட்டுடன் முன்னோடிச் சோதனையின் படி மாற்றங்கள் மேற்கொள்ளப்பட்டு தேசிய போசாக்கு தர நியமங்கள் முடிவுக்குக் கொண்டவரப்பட்டது

# தேசிய போசாக்கு தர நியமங்கள்

தேசிய போசாக்கு தர நியமங்கள் முதியோர் இல்லங்களில் வாழும் முதியோர்களுக்கு போசாக்கு மற்றும் தரமான உணவு வழங்குவதற்கான ஏழு தர நியமங்களை அடையாளம் கண்டுள்ளன.

## 1. போசாக்கு ஆதரவு மற்றும் பராமரிப்பு சேவைகள்

முதியோர் பராமரிப்பு இல்லங்களில் வசிக்கும் முதியோர்களை சமூகத்தில் வாழும் முதியோர்களுடன் ஒப்பீட்டு நோக்கும் போது அதிகமாக குறைபோசாக்கு நிலைக்கு ஆளாகின்றார்கள் என்று இலங்கையில் கிடைக்கும் ஆராய்ச்சி சான்றுகள் தெரிவிக்கின்றன (Rathnayake et al., 2014*. Fernando & Wijesinghe, 2010).** முதியோர்களுக்கான போசாக்கு மதிப்பீடு, போசாக்கு பராமரிப்பு[1] மற்றும் ஆதரவு[2] போன்றன முதியோர் வைத்தியப் பரமரிப்பு சேவைகளில் அத்தியாவசிய கூறுகளாகும். முதியோர்களை இல்லங்களில் சேர்க்கும் போது அவர்களுக்கு போசாக்கு பராமரிப்பு வழங்குவதற்கும் மற்றும் ஒவ்வொரு முதியோர்களின் போசாக்கு மட்டத்தின் முன்னேற்றத்தை கண்காணிப்பதற்கு கிரமமான போசாக்கு மதிப்பீட்டினை தொடர்வதற்கும் அடித்தள போசாக்கு மட்டத்தின் மதிப்பீடு அவசியமாகும். போசாக்கு பராமரிப்பு சேவைகளை வழங்கும் போது முதியோருக்கான போசாக்கு பிரச்சினைகள் தொடர்பாகவும் உணவு உட்கொள்வதில் உள்ள பிரச்சினைகளுக்கு தீாவுகாணவும் ஆதரவு வழங்கல் வேண்டும். போசாக்கு ஆதரவு மற்றும் சேவைகளைத் திட்டமிடும் போது அவர்களின் மதம் மற்றும் கலாச்சாரம் பின்புலத்திற்கு அடிப்படையாக கொண்டு தகவலறிந்த தேர்வுகளுக்கு விசேட கவனம் செலுத்த வேண்டும்.

## 2. போசாக்கு பராமரிப்பு திட்டம்[3]

முதியோர்கள் மத்தியில் தொற்றா நோய்களின் பரவல் மிகவும் அதிகமாக காணப்படுகின்ற அதேவேளை போசாக்கு பிரச்சினைகளான அதி போசணை மற்றும் நுண்போசணை போன்ற போசாக்குக் குறைபாடுகள் பொதுவாக முதியோர்களிடையே காணப்படுகின்றது. சத்தான போசாக்கு உணவு, சீரான நிலைத்தன்மை[4] மற்றும் பரிமாறல் அளவுகள், உணவூட்டல் முறைகள் மற்றும் போதுமான ஊட்டச்சத்து கண்ணாணிப்பு போன்றவற்றை முதியோர்களுக்கான போசாக்கு பராமரிப்பு

* Rathnayake, K.M., Wimalathunga, M.P.P.M., Weech, M., Jackson K. G. & Lovegrove, J. A. (2014). *Undernutrition and dietary pattern in Sri Lankan instutionalized elderly.* Proceedings of the nutrition society. 14 -17

** Fernando, W.H.K.N &Wijesinghe, D. G. N.G. (2010). *Assessment of nutritional status and disease prevalence among elderly population in elderly homes in Kandy.* Tropical agricultural research. Volume 21(3): 229-237

மற்றும் 1, 2, 3, 4 – சொற்கழஞ்சியத்தைப் பார்க்கவும்

திட்டங்களில் கட்டாயமாக உள்ளடக்கப்பட்டிருக்க வேண்டும். எனவே இந்த அமைப்பு ஆரோக்கியமான முதியோர்களுக்கும் அதேபோன்று குறைபோசாக்கு மற்றும் கடுமையான அல்லது நாட்பட்ட நோய்களுடன் வசிப்போருக்கும் மருத்துவ தொழில்சார் வல்லுனர்களின் சிபாரிசுடன் முதியோர் பராமரிப்பு நிறுவனங்கள் போசாக்கு பராமரிப்பு திட்டங்களை கொண்டிருத்தல் வேண்டும்.

### 3. உணவுச் சூழல்

முதியோர்களில் நோய் எதிர்ப்பு சக்தி பலவீனமடைவதினாலும் இலகுவில் தொற்று நோய்க்குள்ளாகும் வாய்ப்பு அதிகமாக இருப்பதனாலும் அவர்களுக்கு சுகாதாரமாக தயாரிக்கப்பட்ட பாதுகாப்பான உணவு மற்றும் பாதுகாப்பான குடிநீர் வழங்கப்பட வேண்டும். அதேநேரம், சரியான முறையில் குப்பை கழிவுகளை அகற்றும் உணவு சூழல் மற்றும் உணவினால் பரவும் நோய்களை தடுப்பதற்கு தொற்றுக்களை ஏற்படுத்தும் காவிகளை பாதுகாப்பாக கட்டுப்படுத்தும் நடவடிக்கைகள் போன்றன முன்னெடுக்கப்பட வேண்டும்.

### 4. உடற் செயற்பாடு மற்றும் பொழுதுபோக்குகள்

வாழ்க்கையில் உளவியல் மற்றும் சமூகம் சார்ந்த முன்னேற்றத்திற்கு வயோதிப மக்களிடையே உடற்பயிற்சி செயற்பாடுகள் மற்றும் பொழுதுபோக்கு நடவடிக்கைகள் கட்டாயமாக ஊக்குவிக்கப்பட வேண்டும். சார்க்கோபீனியா (sarcopenia) காரணமக தசை நார் இழப்பை தடுப்பதற்கு உடற்பயிற்சி செயற்பாடு உதவுகின்றது, இது வயதான காலத்தில் நோயுற்ற தன்மையை ஏற்படுத்தும் ஒரு பொதுவான நிலையாகும். மேலும் மூட்டுக்களின் செயற்பாடுகளிற்கும், உடல் நிறையதிகரிப்பை தடுப்பதற்கும் மற்றும் நாளாந்த செயற்பாடுகளை இலகுவில் செய்வதற்கும் உடற் பயிற்சி உதவுகின்றது. வயோதிப முதியோர்கள் உடற்பயிற்சி செயற்பாடுகளை கட்டிலில் / சக்கர நாற்காலியில் இருந்தாலும்கூட இயலுமைக்கேற்ப மட்டுப்படுத்தப்பட்ட சிபாரிசிக்குள் செய்தல் வேண்டும்.

அவர்களின் உளவியல் சமுக ஆரோக்கியத்தினை முன்னேற்றுவதற்கும் மற்றும் போசாக்கு மட்டத்தை மறைமுகமாக உயர்த்துவதற்கும் பொழுதுபோக்கு செயற்பாடுகள் சிபாரிசு செய்யப்பட்டுள்ளது.

### 5. சேவைகள் பற்றிய கருத்து

நிறுவனத்தின் சேவை வழங்கலை மேம்படுத்துவதற்கு அங்கு வாழும் முதியோர்கள் மற்றும் குடும்ப உறுப்பினர்கள் வழங்கும் பின்னூட்டக்கருத்து[6] தேவைப்படுகின்றது. முதியோர் இல்லத்தில் வசிக்கும் முதியோர்கள், அவர்களுடைய குடும்பங்கள்,

---

மற்றும் 5, 6 – சொற்கழஞ்சியத்தைப் பார்க்கவும்

நண்பர்கள், நன்கொடையாளர்கள் மற்றும் சமூகத்தினர் போன்றோர் முதியோர் பராமரிப்பு சேவைகள் குறித்து தங்கள் பின்னூட்டக் கருத்தை வழங்க ஊக்குவிப்பதோடு அதற்கேற்ப இயலுமானவரை தேவையான மாற்றங்கள் / நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும்.

## 6. மனித வளங்கள்

முதியோர்களுக்கு நல்ல தரமான சேவைகளை வழங்க ஒரு நிறுவனத்திற்கு போதுமான எண்ணிக்கையில் அறிவு மற்றும் திறன்மிக்க ஊழியர்கள் தேவைப்படுகின்றது. எனவே முதியோர்களை தேவையான கவனிப்புடன் பராமரிப்பதற்கு பராமரிப்பு வழங்குநர்களின் வழக்கமான திறன் மேம்பாடு அவசியமாகும்.

## 7. நிறுவன ஆளுகை

உணவு மற்றும் போசாக்கு தொடர்பான சேவைகளை வழங்குவதற்கு முதியோர் இல்ல நிறுவனம் பொறுப்பாக இருத்தல் வேண்டும். சமத்துவமான[7] போசாக்கு சேவைகளுடன் தரமான பராமரிப்பு சேவைகளை முதியோர்களுக்கு வழங்குவதற்காக அவர்களினால் வழங்கப்படும் போசாக்கு வெளிப்பாடுகளுக்கான சேவைகளை கண்காணிப்பது அவசியமாகும். எனவே நல்ல நிறுவன ஆளுகை[8] ஆட்சி அனைத்து பங்குதாரர்களின் மற்றும் நிறுவனத்தின் தேவைகளுக்கு எப்போதும் பதிலளிக்க்கூடியதும் அதேநேரத்தில் முடிவெடுப்பதற்கான தொலைநோக்கு கொள்கையையும் மற்றும் அனைத்து பங்குதாரர்களின் சிறந்த நலன்களுக்கான சட்ட கட்டமைப்பையும் கொண்டிருக்கவேண்டும். நிறுவனத்தின் கொள்கை முன் முயற்சி கருத்துக்கள், அனுபவங்கள், விருப்ப தேர்வுகள், குறைபாடுகள் மற்றும் பிற மனித பலங்கள் போன்றவற்றிக்கு தீர்வுகாண வேண்டும்.

---

மற்றும் 7, 8 – சொற்கழஞ்சியத்தைப் பார்க்கவும்

## போசாக்கு தர நியமங்களின் பிரதிபலிப்பு

தேசிய போசாக்கு தர நியமங்களில், ஒவ்வொரு தர நியமங்களும் கிழே கொடுக்கப்பட்டுள்ள அம்சங்களின் படி பிரதிபலிக்கின்றன்.

1. தர நியமத்தின் நோக்கம்
2. நுகர்வோர் வெளிப்பாடு
3. முதியோர் இல்ல நிறுவனத்தின் பொறுப்பு
4. நியமங்களை அடைவதற்கான தேவைகள்



## தர நியமம் 1: போசாக்கு ஆதரவு மற்றும் பராமரிப்பு சேவைகள்

| தர நியமத்தின் நோக்கம் | பயனாளிகளுக்கான விளைவு / கள் | நிறுவனத்தின் பொறுப்பு |
|---|---|---|
| • போசாக்கு மதிப்பீடு<br>• போசாக்கு ஆதரவு<br>• போசாக்கு பராமரிப்பு சேவைகள்<br>• தகவலறிந்த தேர்வுகள்/ விபரமறிந்து ஏற்கும் தெரிவுகள் | • "எனது வாழ்க்கை தரத்தை உயர்த்துவதற்காக போதுமான அளவு போசாக்கு சவால்களுக்கு முகம் கொடுக்கப்பட்டுள்ளது".<br>• "எனது கலாச்சார மற்றும் மத பின்னணிக்கு ஏற்ப நான் உணவுகளைப் பெறுகிறேன்" | • குடியிருப்பாளர்களின் போசாக்கு மட்டம் மற்றும் தேவைகளை மதிப்பீடு செய்ய உதவுதல்.<br>• ஏழைகளுக்கான பரிந்துரை உட்பட குடியிருப்பாளர்களுக்கு வழங்கப்படும் போசாக்கு பராமரிப்பு மற்றும் ஆதரவு சேவைகளை இலகுவாக்குதல்.<br>• உணவு தொடர்பாக நுகர்வோர்களின் கலாச்சார/ மதம் சார்ந்த பின்னணிக்கு ஏற்ப மதிப்பளித்தல். |

*இந்த தர நியமத்தை அடைவதற்கான தேவைகள் இணைக்கப்பட்டுள்ளன (பின் இணைப்பு இல. I).*

## தர நியமம் 2: போசாக்கு பராமரிப்புத் திட்டம்/ங்கள்

| தர நியமத்தின் நோக்கம் | பயனாளிகளுக்கான விளைவு / கள் | நிறுவனத்தின் பொறுப்பு |
|---|---|---|
| • ஆரோக்கியமான வயதான நபர்கள்<br>• கடுமையான நோய்களுக்கு[10] உள்ளான முதியோர்கள்<br>• நாட்பட்ட நோய்கள்[11] உள்ள முதியோர்கள்<br>• அசதிக் கோளாறுகள்/ முதுமை மறதி, இடுப்பு எலும்பு முறிவு, அறுவைச் சிகிச்சை செய்யப்பட்ட வயதான முதியவர்கள்<br>• குறிப்பிட்ட உணவு உட்கொள்வதில் பிரச்சினையுடைய முதியோர்கள் | • “நான், எனது உடல் மற்றும் மன நிலைகளை கருத்தில் கொண்டு உணவு பெறுகிறேன்”. | • ஊட்டச்சத்து தேவைப்பாடுகள்[9], உணவூட்டல் முறைகள், நிலைத்தன்மை மற்றும் பரிமாறும் அளவுகள் போன்றவற்றை உள்ளடக்கிய போசாக்கு பராமரிப்பு திட்டங்களை வைத்திருத்தல் வேண்டும்.<br>• நுகர்வோர்களுக்கு அவர்களின் ஆரோக்கியம் மற்றும் போசாக்கு மட்டத்திற்கு ஏற்ப உணவுகளை பெற்றுக் கொள்வதற்கு உதவுகிறது.<br>• போசாக்கு பராமரிப்பு திட்டமிடலில் முடிந்தவரை முதியோர்களின் கலாச்சாரத்தினை கருத்தில் கொள்ளவும். |

*இந்த தர நியமத்தை அடைவதற்கான தேவைகள் இணைக்கப்பட்டுள்ளன (பின் இணைப்பு இல. II).*

9,10,11 – சொற்கழஞ்சியத்தைப் பார்க்கவும்

## தர நியமம் 3: பாதுகாப்பான உணவுச் சூழல்

| தர நியமத்தின் நோக்கம் | பயனாளிகளுக்கான விளைவு / கள் | நிறுவனத்தின் பொறுப்பு |
|---|---|---|
| • கொள்வனவு செய்த அல்லது அன்பளிப்பு அளிக்கப்பட்ட உணவுகளின் தரத்தினை மதிப்பீடு செய்தல்.<br><br>• உணவு பாதுகாப்பு நடவடிக்கைகள்.<br><br>• பாதுகாப்பான உணவு சூழல் (மேலதிக விபரங்களுக்கு முதியோர் இல்ல பராமரிப்பிற்கான தேசிய போசாக்கு தர நியமங்களை செயற்படுத்துவதற்கான வழிகாட்டியை பார்க்கவும்). | • "பாதுகாப்பு உணவுச் சூழல் ஆரோக்கியமாக இருப்பதற்கு எனக்கு உதவியளிகிறது".<br><br>• "பாதுகாப்பான உணவைக் கொண்டிருப்பதற்கான உணவுச் சூழலை தொடர் மதிப்பீடு செய்வதில் நான் ஒரு பங்காளியாக இருக்கிறேன்". | முதியோர் இல்லம் பின்வருவனவற்றைக் கொண்டிருக்கவேண்டும்;<br><br>• உணவு, நீர் மற்றும் உணவுகளை உட்கொள்ளல் போன்றவற்றிற்கான பாதுகாப்பான சூழலை ஏற்படுத்தல்.<br><br>• இயலுமானவரை உணவுப்பட்டியலை (menu) திட்டமிடும் போதும் உணவு சூழலை மதிபபீடு செய்யும் போதும் முதியோர்களை பங்கு பெறசெய்யவும். |

*இந்த தர நியமத்தை அடைவதற்கான தேவைகள் இணைக்கப்பட்டுள்ளன (பின் இணைப்பு இல. III).*

## தர நியமம் 4: உடற் பயிற்சிகள் மற்றும் பொழுதுபோக்குகள்

| தர நியமத்தின் நோக்கம் | பயனாளிகளுக்கான விளைவு / கள் | நிறுவனத்தின் பொறுப்பு |
|---|---|---|
| • உடற் பயிற்சிகள் மூலம் சுறுசுறுப்பான வாழ்க்கை முறையை பேணுதல்.<br>• நாள் முழுவதும் இருக்கையில் அமர்ந்து பணியாற்றும் நேரத்தைக் குறைத்தல்.<br>• பொழுதுபோக்கு மூலம் உளவியல் சமூக நல்வாழ்வு. | • “உடல் பயிற்சிகளில் பங்கேற்பது எனது ஆரோக்கியத்தை மேம்படுத்த உதவுகின்றது”.<br>• “உடற் பயிற்சிகள் மற்றும் பொழுதுபோக்கு நடவடிக்கைகள் என்னை மகிழ்ச்சியாக வைத்திருக்கின்றது”. | • முதியோர்களுக்கு அவர்களின் திறன்களுக்கு ஏற்ப உடற் பயிற்சிகள் மற்றும் பொழுதுபோக்கு நடவடிக்கைகளில் ஈடுபட உதவுங்கள்.<br>• குறைபாடுகள் மற்றும் மந்தபோசாக்கு போன்றவற்றை உடைய முதியோர்கள் உடற் பயிற்சிகளைப் பற்றிய ஆலோசனைகளைப் பெறுவதற்கு வசதி செய்யப்பட்டிருக்க வேண்டும்.<br>• உடற் பயிற்சிகளைச் செய்ய பாதுகாப்பான சூழலை வழங்குதல். |

*இந்த தர நியமத்தை அடைவதற்கான தேவைகள் இணைக்கப்பட்டுள்ளன (பின் இணைப்பு இல. IV).*

## தர நியமம் 5: சேவைகளுக்கான பின்னூட்டக் கருத்து

| தர நியமத்தின் நோக்கம் | பயனாளிகளுக்கான விளைவு / கள் | நிறுவனத்தின் பொறுப்பு |
|---|---|---|
| • போசாக்கு பராமரிப்பு சேவைகளில் நேர்மறையான மற்றும் எதிர்மறையான பின்னூட்டக் கருத்துக்கள்.<br><br>• முறையான மற்றும் முறைசாரா, எழுதப்பட்ட அல்லது வாய்மொழி மூல பின்னூட்டக் கருத்துக்களுக்கான பதில்<br><br>• முறைப்பாடுகள் மற்றும் தீர்வுகள்<br><br>• பின்னூட்டக் கருத்துக்களை பயன்படுத்தி சேவைகளினை மேப்பாடுத்துதல் | • “பின்னூட்ட கருத்து தெரிவிக்க எனக்கு ஆதரவு தந்து ஊக்குவிக்கப் படுகின்றேன்”<br>• எனது பின்னூட்டக் கருத்தை வெளிப்-படுத்துவதற்கும் மற்றும் அதற்கு பொருத்தமான நடவடிக்கை எடுப்பதற்கும் நான் ஈடுபட்டுள்ளேன். | • ஆக்கபூர்வமான பின்னூட்டக் கருத்துக்களை வழங்க முதியோர்கள், அவர்களது குடும்பங்கள், பராமரிப்பு வழங்குநர்கள், நன்கொடை வழங்குநர்கள், சமூகத்தினர் போன்றோரை ஊக்குவிக்கவும்.<br>• பிரச்சினைகளை தீர்க்க வெளிப்படையான வெளிப்படுத்தல்[12] செயல்முறை பயன்படுத்தப் படுகின்றது.<br>• இயலுமானவரை முறைப்பாடுகளை தீர்ப்பதற்கு முதியோர்களை/குடும்ப அங்கத்தவர்களை ஈடுபடச் செய்யவும்.<br>• முறைப்பாடுகளை/ பின்னூட்ட கருத்துக்களை கையாள்வதற்கு ஒரு நபரை நியமிக்கவும்.<br>• பின்னூட்ட கருத்துக்கு பதிலளிக்கும் வகையில் தகுந்த நடவடிக்கை எடுக்கப்படுகிறது.<br>• கவனிப்பு மற்றும் பராமரிப்பு சேவைகளின் தரத்தை மேம்படுத்த பின்னூட்டக் கருத்துக்கள் மற்றும் முறைப்பாடுகள் மதிப்பாய்வு செய்யப்படுகின்றன (பின்னூட்டக் கருத்தை மதிப்பாய்வு செய்வதற்கு செயல்படுத்தல் வழிகாட்டுதலைப் பார்க்கவும்). |

*இந்த தர நியமத்தை அடைவதற்கான தேவைகள் இணைக்கப்பட்டுள்ளன (பின் இணைப்பு இல. V).*

12 – சொற்களஞ்சியத்தைப் பார்க்கவும்

## தர நியமம் 6: மனித வளங்கள்

| தர நியமத்தின் நோக்கம் | பயனாளிகளுக்கான விளைவு / கள் | நிறுவனத்தின் பொறுப்பு |
|---|---|---|
| • போதுமான தொழிலாளர்கள்<br>• தொழிலாளர்களின் அறிவு மற்றும் திறன்கள்<br>• வேலைக்கான சூழலை ஏற்படுத்தல்<br>• செயல் திறன்மிக்க ஆக்கபூர்வமான செயலாக்கத்தின்[13] முன்னேற்ற மதிப்பீடு. | • "அறிவுத் திறன் மற்றும் அக்கறை உள்ளவர்களிடம் இருந்து தரமான உணவு மற்றும் போசாக்கு பராமரிப்பை நான் பெறுகின்றேன்". | • போதுமான பயிற்சி பெற்ற மற்றும் திறமையான பணியாளர்களை நியமித்து பராமிக்க வேண்டும்.<br>• தரமான போசாக்கு பரரமரிப்பு மற்றும் ஆதரவை வழங்குவதற்கான ஆதரவான சூழலை உருவாக்கல். |

*இந்த தர நியமத்தை அடைவதற்கான தேவைகள் இணைக்கப்பட்டுள்ளன (பின் இணைப்பு இல. VI).*

13 – சொற்கழஞ்சியத்தைப் பார்க்கவும்

## தர நியமம் 7: நிறுவன ஆளுகை ஆட்சி

| தர நியமத்தின் நோக்கம் | பயனாளிகளுக்கான விளைவு / கள் | நிறுவனத்தின் பொறுப்பு |
|---|---|---|
| • போசாக்கு தர நியமங்களுடன் இணங்குதல்<br><br>• வினைத்திறன் மற்றும் செயல்திறனை[14] கண்காணித்தல்<br><br>• பொறுப்புக்கூறல்[15] | • "முதியோர் இல்ல முகாமைத்துவ நடைமுறை குறித்து நான் மகிழ்ச்சியடைகிறேன்".<br><br>• நான் பராமரிப்பு மற்றும் சேவைகளை வழங்குவதில் ஒரு பகுதியாக இருக்கிறேன்". | • முதியோர் இல்லங்களில் குடியிருக்கும் முதியோர்களுக்கு மற்றும் அனைத்து பங்குதாரர்களுக்கும் பாதுகாப்பான தரமான போசாக்கு பராமரிப்பு சேவைகளை வழங்குவதற்கு நிறுவனத்தின் நிர்வாகக் குழு பொறுப்புடைமையுடன் செயற்படுத்த வேண்டும். |

*இந்த தர நியமத்தை அடைவதற்கான தேவைகள் இணைக்கப்பட்டுள்ளன (பின் இணைப்பு இல. VII).*

14 மற்றும் 15 – சொற்களஞ்சியத்தைப் பார்க்கவும்

# சொற்களஞ்சியம் (Glossary)

1. **போசாக்கு பராமரிப்பு (Nutrition care)** – போசாக்கு பராமரிப்பு என்பது முதியோர்களுக்கு அவர்களின் உடற்செயற்பாடு மற்றும் உளவியல் நிலைகளை கருத்தில் கொண்டு போதுமானளவு ஊட்டச்சத்து வழங்குதல் ஆகும்.

2. **போசாக்கு ஆதரவு (Nutrition support)** - போசாக்கு ஆதரவு என்பது முதியோர்களின் போசாக்கு தேவைகளை உறுதி செய்வதற்கு குறிப்பாக குழாய் மூலம் மற்றும் பிரத்தியேக போசாக்கு ஊட்டச்சத்தினை வழங்குதல் போன்ற போசாக்கு சிகிச்சை வழங்குதல் ஆகும்.

3. **பேசாக்கு பராமரிப்பு திட்டம் (Nutrition care plan)** – பேசாக்கு பராமரிப்பு திட்டம் என்பது மருத்துவ நிபுணர்/கள் தீர்மானித்த படி ஒவ்வொரு தனிநபரின் போசாக்கு மட்டம் மற்றும் அவர்களின் இணை நோய்கள் தொடர்பாக முகாமைத்துவ திட்டமாகும். இந்த முதியோர்கள் அவர்களின் போசாக்கு மட்டம் மற்றும் அதனுடன் தொடர்புடைய இணை நோய் நிலைமைகளுக்கு ஏற்ப சாதாரண, விசேஷ அல்லது மருந்து சிகிச்சை முறையியல் மூலம் உணவைப் பெறலாம்.

4. **உணவின் நிலைத்தன்மை (Consistency of diet)-** உணவின் நிலைத்தன்மை என்பது உணவானது திண்மாக, அரைத்திண்மாக (உதாரணம்:- கூழ் (சாறு), அரைத்த கஞ்சி அல்லது சூப் போன்றன) அல்லது திரவ ஆகாரமான உணவுகளாக (வடித்த கஞ்சி அல்லது சூப், பால் அல்லது திரவ குறைநிரப்புணவுகள்) இருக்கலாம்.

5. **பொழுதுபோக்கு (Entertainment)-** பொழுதுபோக்கு என்பது வயதானவர்கள் அனுபவிக்கும் வேடிக்கையான செயற்பாடுகள் (உதாரணம்:- பாடுதல், ஆடுதல், மன்றங்களில் வாசித்தல் மற்றும் சித்திரம் வரைதல் கலை போன்றன).

6. **பின்னூட்டக்கருத்து (Feedback)** – 'இடைவெளி தடங்கல் இல்லாது' சேவைகளை மேம்படுத்துவதற்கு குடியிருப்பாளர்கள்/ குடும்ப அங்கத்தவர்கள்/ பராமரிப்பு வழங்குநர்கள் தங்கள் பின்னூட்ட கருத்தினை தெரிவிக்க நிறுவனம் இடமளித்தல் வேண்டும் என்பதாகும்.

7. **சமவாய்ப்பு (Equity)** – நல்வாழ்வைப் பேணுவதற்காக நியாயமான முறையில் தனிப்பட்டவர்களின் தேவைக்கேற்ப வளங்கள் மற்றும் சேவைகளை பெறுவதற்கு அனைத்து குடியிருப்பாளர்காகிய முதியோர்களுக்கும் சமவாய்ப்பினை வழங்குதல் ஆகும்.

8. **நிறுவன ஆளுகை (Organizational governance)** – ஒரு நிறுவனம் அதன் குறிக்கோள்களை அடைவதற்காக மேற்கொள்ளும் தீர்மனங்களை செயற்படுததும் ஒரு அமைப்பு ஆகும் (பொறுப்பு குறித்த சர்வதேச தர நியமத்தின் வரையறை, ISO 26000).

9. **போசாக்கு தேவைகள் (Nutritional requirement) -** போசாக்குத் தேவை என்பது தனிநபரின் வயது, பால், செயற்பாட்டு மட்டம் மற்றும் இணை நோய்கள் போன்றவற்றிற்கு ஏற்ப ஊட்டச்சத்துக்களின் அளவு ஆகும்.

10. **கடுமையான நோய் (Acute Disease)** – திடீரென வெளிக்காட்டப்படும் அறிகுறிகளினால் குறிப்பிடப்படும் ஒரு நோய் ஆகும்..

11. **நாட்பட்ட நோய் (Chronic Disease)** – நீண்ட காலமாக இருக்கும் ஒரு நோய் ஆகும்.

12. **திறந்த வெளிப்படுத்தல் செயல்முறை (Open disclosure process)** –நோயாளி தொடர்பான சம்பவம் அல்லது சுகாதார பராமரிப்பு செய்முறையின் போது ஏற்படும் தீங்கு குறித்து ஒரு நோயாளி மற்றும்/அல்லது அவர்களுக்கு உதவுகின்ற நபருடன்/ நபர்களுடன் ஆன தொடர்பாடல் செயல்முறை ஆகும்.

13. **செயல்திறன் மதிப்பீடு (Performance appraisal)** – செயல்திறன் மதிப்பீடு என்பது முதியோர்களுக்கான/ குடியிருப்பாளர்களுக்கான போசாக்கு பராமரிப்பு தொடர்பாக ஒரு தனிப்பட்ட ஊழியரின் வேலைச் செயல்திறன் மற்றும் உற்பத்திதிறனை மதிப்பீடு செய்கின்ற ஒரு பொதுவான மற்றும் குறிப்பிட்ட காலச் செயல்முறையாகும்,

14. **விளைதிறன் மற்றும் வினைத்திறன் (Effectiveness and Efficiency ) -** பங்குதாரர்களின் தேவைகளை பூர்த்தி செய்வதற்கு சாதகமான முடிவுகளைத் தருகின்ற அதேவேளை மனித, தொழிநுட்ப, நிதி, இயற்கை மற்றும் சுற்றுச்சூழல் போன்ற வளங்களை உச்ச அளவில் பயன்படுத்தும் நிறுவனச் செயல்முறைகளாகும்.

15. **பொறுப்புக்கூறல் (Accountabilitity)** – நீங்கள் என்ன செய்கிறீர்கள் என்பதற்கும் அதற்கு திருப்திகரமான காரணத்தை அளிப்பதற்கும் பொறுப்பாக இருத்தலைக் குறிக்கிறது.

16. **உணவூட்டல் முறைகள் (Feeding methods) -** வாய்வழி உணவூட்டல், இரப்பை தடத்தில் உணவூட்டல் (enteral) - (குழாய் மூலம் உணவூட்டல் (tube feeding) அல்லது சுவையுணவுக்கலை மூலம் உணவூட்டல் (feeding through gastrostomy/ jejunostomy)) மற்றும்/ அல்லது நாளம் ஊடாக உணவூட்டல் (parenteral feeding) (இரத்த நாளத்தினூடாக போசாக்கு வழங்குதல் நிர்வாகம் (intravenous administration of nutrition) ஆகியவை அடங்கும்.

17. **மருத்துவ போசாக்கு சிகிச்சை (Medical nutrition therapy)** வழக்கமான அல்லது சிறப்பு உணவை உள்ளடக்கியது அல்லது வாய் வழி குறைநிரப்பு உணவு ஆகியவை அடங்கும்.

18. **உள்ளடக்கம் (Inclusiveness)** – பங்குதாரர்களுக்கு சமுதாயத்தின் மதிப்பை கருத்தில் கொண்டு நல்வாழ்வை பராமரிப்பதற்கு, மேம்படுத்துவதற்கு அல்லது பொதுவாக மேம்படுத்துவதற்கான வாய்ப்பை வழங்குகிறது

19. **பங்குபற்றல் (Participation)** – பங்குபற்றல் என்பது குடியிருப்பாளர்கள் (முதியோர்கள்)/ குடும்ப அங்கத்தவர்கள்/ பாதுகாவலர்கள்/ பராமரிப்போர்/ வேறு ஏதேனும் தொடர்புடைய பங்குதாரர்கள் நேரடியாகவோ அல்லது பொறுப்பான பிரதிநிதிகள் ஊடாகவோ முதியோர் இல்லத்தின் (நிறுவனத்தின்) மற்றும் அவர்களின்

சிறந்த நல்ன்களுக்காக செயற்படுவதற்கு சுதந்திரமாக தமது கருத்துக்களை வெளிப்படுத்த இடமளித்தலாகும்.

20. **பொறுப்புடைமை (Responsiveness)** – பொறுப்புடைமை என்பது அனைத்து பங்குதாரர்களின் சிறந்த நலன்களுக்கு முழு ஆர்வத்துடன் ஒரு யதார்த்தமான காலத்திற்குள் சேவையை வழங்குவதற்கு நிறுவனமானது (முதியோர் இல்லமானது) தனது நடவடிக்கை வடிவமைத்து முன்னெடுத்தலைக் குறிக்கறது.

21. **ஒருமித்த நோக்குநிலை (Consensus Oriented)** – ஒரு பரந்த ஒருமித்த கருத்தை எட்டுவதற்கு பல்வேறு நலன்களைக் கொண்ட பங்குதாரர்களிடையே விவாத கலந்துரையாடல்களை நடத்துவதாகும்.

# பின் இணைப்புகள்

## பின் இணைப்பு I

**தர நியமம் 1**

1. ***தர நியமத்தினை அடைவதற்கான தேவைகள்***

1.1. முதியோர்களின்/ குடியிருப்பாளர்களின் போசாக்கு மதிப்பீடு ஆனது முதியோர் இல்லத்திற்கு அனுமதிக்கும் போதும் மற்றும் அதன் பின் கால இடைவெளியிலும் கிரமமாக முன்னெடுக்கப்பட வேண்டும்.

அ.) ***அனுமதிக்கும் போது*** –

i. முதியோர் இல்லம் பராமரிப்பு நிறுவனம் சுகாதார பதிவேடு ஒன்றைப் பேணுவதுடன் மற்றும் ஒவ்வொரு குடியிருப்பாளர்களின் (முதியோர்களின்) போசாக்கு மட்டத்தின் முன்னேற்றத்தை மதிப்பிடுவதற்கான பராமரிப்பு திட்டத்தையும் பேணுதல் வேண்டும்.

ii. முதியோர் இல்லம் பராமரிப்பு நிறுவனத்தின் பயிற்சிபெற்ற ஊழியரினால் ஒரு துரிதமான ஆய்வு (rapid screening) மேற்கொள்ளப்பட வேண்டும் மற்றும் அவை புதிய வருகையாளர்களின் சுகாதாரப் பதிவேட்டில் ஆவணப்படுத்தப்பட வேண்டும் (மேலதிக விபரங்களுக்கு தேசிய போசாக்கு தர நியமங்களை நடைமுறைப்படுத்துவதற்கான வழிகாட்டியை பார்க்கவும்).

ஆ.) ***விரிவான மதிப்பீடு*** –

i. அருகிலுள்ள மருத்துவமனை/ MOH அலுவலகம்/ பொதுவான செயல்முறையில் இருக்கும் தொழில் சார்ந்த வல்லுனர்கள், போசாக்கு மதிபீட்டுக்கு அதிகாரமுள்ளவர்களினால் (போசாக்கு நிபுணர், மருத்துவ அதிகாரி) விரிவான போசாக்கு மதிப்பீட்டினை மேற்கொள்வதற்கு புதிய குடியிருப்பாளர்களை முதியோர் இல்ல நிறுவனத்தின் பதவிநிலை ஊழியர்கள் பரிந்துரைக்க வேண்டும்.

ii. முதியோர்கள் அனுமதிக்கப்பட்ட இரண்டு வாரங்களுக்குள் விரிவான மதிப்பீடு நிறைவேற்றப்படவேண்டும் மற்றும் தகவலறிந்த தேர்வுகளுக்கு உதவவேண்டும் என கருத்தில் கொண்டு போசாக்கு பராமரிப்பு திட்டம் பரிந்துரைக்கப்படுகின்றது.

iii. ஒரு சுகாதார நிபுணரால் கோரப்பட்டால், தேவைப்படும் முதியோர்களுககான மூப்பியல் மருத்துவத்துறை சார்ந்த விரிவான மதிப்பீட்டை செய்வதற்கு முதியோர் இல்ல நிறுவனம் உதவவேண்டும்.

இ) ***அவ்வப்போது மதிப்பீடு (Periodical assessment)***

i. அவ்வப்போது (அல்லது வருடாந்தம்) மதிப்பீடு (தேவைப்படின்) ஒன்றினை

நிறுவனத்தில் இருந்து நியமிக்கப்பட்ட பதவிநிலை ஊழியர் ஒருவரால் ஒருங்கிணைக்கப்பட்டு வசதி செய்யப்பட வேண்டும். இது ஒரு தொழில்முறை நிபுணரால் (போசாக்கு மருத்துவ அலுவலர் / போசாக்கு நிபுணர்) மேற்கொள்ளப்பட வேண்டும்.

ii. ஒரு சுகாதார நிபுணரால் பரிந்துரைக்கப்படும் காலக்கிரம மதிப்பீடுகளுக்கு நிறுவனம் அவற்றை மேற்கொள்வதற்கு ஒருங்கிணைத்து வசதி செய்ய வேண்டும்.

### *1.2 முதியோர்களுக்கு / குடியிருப்பாளர்களுக்கு போசாக்கு பராமரிப்பு மற்றும் போசாக்கு ஆதரவு சேவைகள் வழங்கல்.*

i. முதியோர் இல்லங்களில் வாழும் அனைத்து முதியோர்களும் அவர்களின் உடல் மற்றும் உளவியல் நிலையை கருத்தில் கொண்டு போசாக்கு பராமரிப்பினை பெறவேண்டும் (மேலதிக விபரங்களுக்கு போசாக்கு தர நியமங்கள் நடைமுறைப்படுத்தும் வழிகாட்டியை பார்க்கவும்). உணவு வழங்கும்போது முதியோர்களின் உணவு விருப்பமும் (சமூக, கலச்சாரம், மதம் மற்றும் தனிப்பட்ட பின்னணிக்கேற்ப) கருத்தில் கொள்ளப்பட வேண்டும்.

ii. பலவீனமான அல்லது உணவளிப்பதில் சிரமங்கள் ஏற்பட்டால், அண்மையிலுள்ள சுகாதார நிறுவனங்களில் பணியாற்றும் போசாக்கு மருத்துவ ஆலோசகர், மருத்துவ அதிகாரி, போசாக்கு நிபுணர், பேச்சு சிகிச்சையாளர், தொழில்சார் சிகிச்சையாளர்கள் மற்றும் பொது சுகாதார தாதி அலுவலர் போன்ற பல பிரிவினரை கொண்ட குழுவினால் போசாக்கு ஆதரவு சேவைகள் தீர்மானிக்கப்படலாம்.

iii. நிறுவனத்தைச் சேர்ந்த நியமிக்கப்பட்ட பதவி நிலை அலுவலர்கள் பல பிரிவினரை கொண்ட பன்முக குழுவுடன் ஒருங்கிணைந்து, முதியோர் இல்லங்களில் வாழும் குடியிருப்பாளர்களுக்கு சிறந்த முறையில் அவர்களின் கருத்துக்களை இலகுவாக விளங்கக்கூடிய முறையில் எடுத்துக்கூறல் வேண்டும்.

- நாளத்தின் ஊடாக போசாக்கு ஆதரவு வழங்க பரிந்துரைக்கப்படுமிடத்து, நிறுவனம் பொது சுகாதார தாதி அலுவலருக்கு (நாளத்தினூடாக ஊட்டச்சத்துக்கள் வழங்குதல்) அதனை முன்னெடுப்பதற்குத் தேவையான ஆதரவை வழங்க வேண்டும்.

- தேவைப்படும் முதியோருக்கு குழாய் மூல உணவூட்ட ஆதரவு (குழாய் மூல உணவூட்டம், இரப்பையிற்கு உணவூட்டல் (gastrostomy) jejunostomy) நிறுவனத்தில் பயிற்சியளிக்கப்பட்ட நபரால் வழங்கப்படலாம். அண்மையிலுள்ள மருத்துவ மனையில் சேவையாற்றும் பொது சுகாதார தாதி அலுவலரினால் அவர்களுக்கான பயிற்சி ஒழுங்கு செய்யப்படலாம்.

### தர நியமம் 2

### 2. தர நியமத்தினை அடைவதற்கான தேவைகள்

2.1. முதியோர்களின் உடல் நலம் மற்றும் போசாக்கு மட்டத்திற்கு ஏற்ப வழக்கமான உணவு அல்லது பரிந்துரைக்கப்பட்ட சிறப்பு உணவுகள் அல்லது சிகிச்சை உணவுகள் (therapeutic diet) வழங்குதல் போன்ற போசாக்கு பராமரிப்பு திட்டங்கள் பெறக்கூடியதாக இருத்தல் வேண்டும்.

2.2. முதியோர்களுக்கான உணவு வகைப் படடியல் (menu) உணவில் உள்ள ஊட்டச்சத்துக்களைக் கருத்தில் கொண்டு திட்டமிடப்பட வேண்டும்.

- உணவுகள் கலோரி, புரதம், மற்றைய பெரிய மற்றும் நுண்ணூட்டச்சத்துக்கள், நார்ச்சத்து மற்றும் திரவம் போன்றவற்றின் தேவையை பூர்த்தி செய்ய வேண்டும்.
- ஒரு தொழில் வல்லுனரால் (போசாக்கு மருத்துவ நிபுணர் /மருத்துவ அலுவலர் அல்லது போசாக்கு நிபுணர்) முதியோர்களின் உடல், மருத்துவ மற்றும் மன நிலைக்கு ஏற்ப பரிந்துரைக்கப்பட மருத்துவக் குறிப்புகளுக்கு அமைய உணவின் வகை. வழங்கப்பட வேண்டிய தடவைகளின் எண்ணிக்கை (அதிர்வெண்) மற்றும் உணவூட்டல் முறை[16] (வாய்வழி/ இரப்பைக்குடல் தடம் வழியாக/ பெற்றோர்களினால்), மருத்துவ போசாக்கு சிகிச்சையளித்தல்[17] போன்றன அடையாளம் காணப்பட வேண்டும்.
- போதுமான அளவு ஊட்டச்சத்து மற்றும் திரவ சமநிலையை கண்காணிப்பது தேவைக்கு ஏற்ப வசதி செய்யப்பட்டு இருக்க வேண்டும்.

2.3. முதியோர்களுக்கான உணவு தயாரிக்கும் போதும்/ ஒழுங்கு செய்யப்படும் போதும்/ பெற்றுக்கொள்ளும் போதும் ஊட்டச்சத்துக்களின் உள்ளடக்கத்தையும் நிலைத்தன்மையையும் மற்றும் உருவாக்கத்தையும் கருத்தில் கொள்ளவேண்டும்.

i. சிபாரிசு செய்யப்பட்ட உணவுப் பட்டியல், உணவின் நிலைத்தன்மை மற்றும் உணவின் அளவு போன்றவற்றிக்கு ஏற்பவும் முதியோர்களின் கலாச்சார மற்றும் மத விருப்பங்களுக்கு ஏற்பவும் உணவு வழங்கப்பட வேண்டும்.

ii. உணவு குறிப்பிடப்பட்ட குறித்த நேரத்தில் வழங்கப்பட வேண்டும்.

iii. குடியிருப்பாளர்களான முதியோர்களின் உடற்செயற்பாடு, மருத்துவம் மற்றும் மன நலம் சார்ந்த நிலமைகளுக்கு ஏற்ப ஆரோக்கிய உணவு விருப்பங்கள் பற்றி நன்கொடையாளர்களுக்கு தெரியப்படுத்தல் வேண்டும்.

### 2.4. தேவைப்படும் முதியோர்களுக்கு பரிந்துரைகளுக்கேற்ப உணவளிக்கப்படும்

i. தொழில்முறை நிபுணரின் பரிந்துரைகளுக்கு ஏற்ப முன்னெடுக்கப்பட வேண்டும். தேவையான போதெல்லாம் தொழில்முறை நிபுணரின் ஆதரவைப் பெறுங்கள்.

ii. விழுங்குவதில் சிரமங்கள் மற்றும் வேறு போசாக்கு பிரச்சினைகள் உள்ளவர்களுக்கு பேச்சு சிகிச்சையாளர் / மருத்துவ நிபுணர்களுடன் கலந்தாலோசிக்க உதவுங்கள்.

*பின் இணைப்பு III*

***தர நியமம் 3***

***3. தர நியமத்தினை அடைவதற்கான தேவைகள்***

***3.1. கொள்வனவு செய்த உணவின் / அன்பளிப்போர் உணவி***ன் தரத்தை மதிப்பீடு செய்தல் (மேலதிக விபரங்களுக்கு முதியோருக்கான பராமரிப்பு நிலையங்களின் தேசிய போசாக்குத் தர நியமங்களை நடைமுறைப்படுத்துவதற்கான வழிகாட்டுதலைப் பார்க்கவும்).

i. தினசரி அனைத்து உணவுப் பிரிவுகளையும் உள்ளடங்கிய பல்வகைப்படுத்தப்பட்ட உணவுகள்.

ii. தோற்றம் (அளவு, வடிவம், நிறம், பளபளப்பு மற்றும் நிலைத்தன்மை), மணம், சுவை மற்றும் அமைப்பு போன்றவை உள்ளிட்ட உணவின் வெளிப்புற தரங்கள்.

***3.2.*** உணவு வழங்கும் போதும், கழஞ்சியப்படுத்தும் போதும், உணவு தயாரிக்கும் போதும் அதனை கையாளும் போதும் உணவு பாதுகாப்பு மதிப்பீடு செய்தல் (மேலதிக விபரங்களுக்கு முதியோருக்கான பராமரிப்பு நிலையங்களின் தேசிய போசாக்குத் தர நியமங்களை நடைமுறைப்படுத்துவதற்கான வழிகாட்டுதலைப் பார்க்கவும்).

***3.3.*** பாதுகாப்பான நீர், சுகாதாரம் மற்றும் பூச்சி கட்டுப்பாடு அடங்கலாக பாதுகாப்பான உணவுச் சூழல் (மேலதிக விபரங்களுக்கு முதியோருக்கான பராமரிப்பு நிலையங்களின் தேசிய போசாக்குத் தர நியமங்களை நடைமுறைப்படுத்துவதற்கான வழிகாட்டுதலைப் பார்க்கவும்).

i. விநியோகிக்கப்பட்ட (சமைக்காத மூலப்பொருட்கள்/ சமைக்கப்பட்ட உணவுகள்) உணவின் தரத்தை மதிப்பீடு செய்வதற்கு நிறுவனத்தின் அலுவலர் உறுப்பினரை நியமிக்க வேண்டும்.

ii. தேவையான வளங்கள் உள்ளிட்ட பாதுகாப்பான உணவு சூழலுக்கு வசதி செய்யப்பட்டு இருத்தல் வேண்டும்.

iii. திறன்மிக்க ஊழியர்கள் பாதுகாப்பான உணவு மற்றும் சுற்றுச் சூழல் நடவடிக்கைகளில் ஈடுபடவேண்டும்.

iv. ஏற்றுக்கொள்ளப்பட்ட உள்ளூர் கழிவுகளை அகற்றும் பொறிமுறைகளின் படி பாதுகாப்பான முறையில் கழிவுகளை அகற்றுதல்.

v. பாதுகாப்பான உணவு சூழலை உறுதி செய்வதற்கு பாதுகாப்பான முறையில் பூச்சிக் கட்டுப்பாடு நடவடிக்கைகளை பயன்படுத்துதல்.

*பின் இணைப்பு IV*

***தர நியமம் 4***

***4. தர நியமத்தினை அடைவதற்கான தேவைகள்***

4.1. வயதான முதியோர்களுக்கும் மற்றும் நிறுவனத்தின் முகாமைத்துவத்தினர்களுக்கும் மத்தியில் உடற் செயற்பாடுகள் மற்றும் பொழுதுபோக்குகளின் முக்கியத்துவம் குறித்து விழிப்புணர்வை ஏற்படுத்துதல் / தெளிவூட்டல்.

4.2. நிறுவனத்தினுள் முதியோர்கள் உடற்பயிற்சி செயற்பாடுகள் மற்றும் பொழுதுபோக்கு நடவடிக்கைகளில் ஈடுபடுவதற்காக உட்கட்டமைப்பு வசதிகள் மற்றும் உபகரணங்களை வழங்குதல்.

4.3. உடற்செயலியல் அங்கவீனமுற்ற முதியோர்களுக்கு அவர்களின் இயலுமைக்கேற்ப/ அல்லது பரிந்துரைகளுக்கேற்ப உடற்பயிற்சி செயற்பாடுகளுக்கு வசதி செய்து கொடுத்தல்.

*பின் இணைப்பு V*

***தர நியமம் 5***

***5. நியமங்களை அடைவதற்கான தேவைகள்***

5.1. பின்னூட்ட முறைகள் இலகுவாக்கப்படுகின்றன (உ+ம்: கருத்து பெட்டி/ முறைப்பாட்டு பெட்டி/ ஆலோசனை குறிப்புகள் முதலியன)

5.2. பின்னூட்ட கருத்துக்கு சரியான நேரத்தில் பதிலளித்தல்

5.3. முன்னேற்றத்திற்கான நடவடிக்கைகள்

5.4. முறைப்பாடுகள்/ பின்னூட்டக் கருத்து தொடர்பாக பதிவேடுகளை வைத்திருத்தல்.

*பின் இணைப்பு VI*

***தர நியமம் 6***

***6. தர நியமத்தினை அடைவதற்கான தேவைகள்***

***6.1.*** குடியிருப்பாளர்களான முதியோர்களின் எண்ணிக்கைக்கு ஏற்ப போசாக்கு பராமரிப்பிற்கு போதுமான அளவு ஊழியர்களை நியமித்தல் வேண்டும்.

**மனித வளங்களுக்கான ஆகக் குறைந்த தர நியமங்கள்**

- முதியோர் இல்ல குடியிருப்பாளருக்கு பராமரிப்பு வழங்குவோர் விகிதம் = 1 ஊழியருக்கு ஆகக் குறைந்தது 15 நடமாடும் முதியோர்கள்.
- முதியோர்களின் உடல் மற்றும் உளவியல் நிலையைப் பொறுத்து குறைந்தபட்ச எண்ணிக்கையை அதிகரிக்கப்பட வேண்டும்.
  - 3-4 குடியிருப்பாளர்/ உதவி குடியிருப்பாளருக்கு ஒரு பராமரிப்பாளர்
  - முதியோர் இல்ல காப்பாளர்/ முகாமையாளர் – ஆகக் குறைந்தது 1
  - சமையல் காரர்கள் மற்றும் உதவியாளர்கள் – குடியிருப்பாளர்களாகிய முதியோர்களின் எண்ணிக்கைக்கு ஏற்ப உணவு தயாரிப்பதற்கு போதுமானவர்கள்.

தேவைக்கேற்ப வேறு தொழிலாளர்கள் (உ+ம்: பாதுகாப்பு ஆளணி, தாதிமார் ஆகியோர்.)

***6.2. பணியாளர்களுக்கான நிறுவன ஆதரவு***

அ). அறிவு மற்றும் திறன்களை பெறுவதற்கும், தங்கள் சொந்த ஆரோக்கியத்தை பேணுவதற்கும், செயற்படும் சூழலை உருவாக்குவதற்கும் நிறுவன பணியாளர்களுக்கு ஆதரவு அளிக்க வேண்டும்.

இயலுமை திறன் மேம்பாட்டை உறுதிசெய்தல்:

- வெளிப்புற காரணிகள் தொடர்பாக உணவின் தரத்தை மதிப்பீடு செய்தல்
- உணவு பாதுகாப்பு மற்றும் சுகாதார செயற்பாடுகள்
- இலங்கையர்களுக்கான மாதிரி உணவுத் தட்டில் பரிந்துரைக்கப்பட்ட உணவு அடிப்படையிலான உணவு வழிகாட்டுதல்கள் மற்றும் உணவுகள்
- உணவு தயாரிப்பு மற்றும் சமையல்
- அடிப்படை போசாக்கு மதிப்பீடு
- குறிப்பாக தேவைப்படுபவர்களுக்கு உணவூட்டும் திறன்கள்
- போசாக்கு தொடர்பான அடிப்படை பயிற்சி
- வேறு ஏதாவது போசாக்கு தொடர்பான பயிற்சி

***6.3.*** ஊழியர்களின் உடல், உளவியல், மற்றும் சமுக நல்வாழ்வைப் பாதுகாக்க தேவையான வசதிகள் மற்றும் ஆதரவான பணிச்சூழலை ஏற்படுத்தல்.

***6.4.*** போசாக்கு தொடர்பான சேவைகளின் தரத்தை பராமரிப்பதற்கான ஊழியர்களின் ஆக்கபூர்வமான செயல்திறனை மதிப்பீடு செய்தல் (மேலதிக விபரங்களுக்கு முதியோருக்கான பராமரிப்பு நிலையங்களின் தேசிய போசாக்குத் தர நியமங்களை நடைமுறைப்படுத்துவதற்கான வழிகாட்டுதலைப் பார்க்கவும்).

*பின் இணைப்பு VII*

### *தர நியமம் 7*

### *தர நியமத்தினை அடைவதற்கான தேவைகள்*

1.1. முதியோர் இல்லத்தினை செயற்படுத்தும் குழு உணவு மற்றும் போசாக்கு பராமரிப்பு தொடர்பான பொறுப்புணர்வு சேவை வழங்கலுடன் தரமான பராமரிப்பு சேவைகள் உள்ளடங்களாக ஒரு பாதுகாப்பான கலாச்சாரத்தை ஊக்குவிக்க வேண்டும்.

i. தேவைகள் மற்றும் விளைவுகளை அமுலாக்குவதை கண்காணிக்கவும்.

ii. சிறந்த நடைமுறைகளைத் தொடர தர நியமங்களைக் பின்பற்றுவதை மதிப்பீடு செய்தல் (மாதிரி மதிப்பீடு முறை கருவிகளுக்கு, மேலதிக விபரங்களுக்கு முதியோருக்கான பராமரிப்பு நிலையங்களின் தேசிய போசாக்குத் தர நியமங்களை நடைமுறைப்படுத்துவதற்கான வழிகாட்டுதலைப் பார்க்கவும்).

iii. தகவல் முகாமைத்துவம் மற்றும் தெடர்ச்சியான சான்றுகளை அடிப்படையாக கொண்ட முன்னேற்ற சேவைகளுக்கான வழிமுறைகள்.

iv. மனிதவலு, தொழிநுட்பம், நிதி, இயற்கை மற்றும் சுற்றுச்சூழல் உள்ளிட்ட வளங்களை வினைத்திறனுடன் பயன்படுத்தல்.

v. பயனுள்ள இடர் முகாமை முறைகள் மற்றும் நடைமுறைகள்.

vi. போசாக்கு பராமரிப்பு மற்றும் ஆதரவு சேவைகளை திட்டமிடுவதிலும் வழங்குவதிலும் சம வாய்ப்பு மற்றும் உள்ளடக்கம்[18] ஆகியவற்றைத் தொடரவும்.

vii. பங்குபற்றல்[19].

viii. பொறுப்புணர்வு[20]

ix. ஒருமித்த நோக்குநிலை[21]

x. தெளிவான பொறுப்புகள் மற்றும் பொறுப்புக்கூறல்களை வழங்குவது உட்பட தொழில்சார் நிர்வாகம்.

---

18, 19, 20 மற்றும் 21 – சொற்கழஞ்சியத்தைப் பார்க்கவும்

## பங்களிப்பாளர்கள்

**குவியப் புள்ளி -** வைத்தியர் லக்மினி மாகொடரத்ன, பதில் பணிப்பாளர்/ போசாக்கப் பிரிவு, சுகாதார அமைச்சு

**ஆசிரியர்கள் -** வைத்தியர் அனேமா சி.எம். பஸ்நாயக்க, சமூக மருத்துவ ஆலோசகர், போசாக்குப் பிரிவு, சுகாதார அமைச்சு
வைத்தியர். கனிஷ்கா அத்துகோரலா, சமூக மருத்துவப் பதிவாளர், போசாக்கப் பிரிவு, சுகாதார அமைச்சு
திருமதி சஜீவனிமரிஹகல்ல, அபிவிருத்தி உத்தியோகத்தர், பதிவு செய்யப்பட்ட போசாக்கு நிபுணர் (CMCC), போசாக்கு பிரிவு, சுகாதார அமைச்சு.

**தமிழ் மொழிபெயர்ப்பு -** திரு. எம். தர்மசீலன், உதவி பணிப்பாளர், போசாக்கு பிரிவு, சுகாதார அமைச்சு

**தொழில்நுட்ப பங்களிப்பு**

1. வைத்தியர் ரசாஞ்சலி ஹெட்டியாராட்சி, முன்னாள் பணிப்பாளர், போசாக்கப் பிரிவு, சுகாதார அமைச்சு
2. வைத்தியர் றேனுஹா ஜெயதிஸ்ஸ, தலைவர் போசாக்கு பிரிவு, மருத்துவ ஆராய்ச்சி நிறுவனம்
3. வைத்தியர் பத்மா குனரத்னே, தலைவர், இலங்கை முதியொர் மருத்துவ சங்கம்.
4. வைத்தியர் பாலசூரியா, தலைவர், பொது சுகாதாரத் துறை, பொது சுகாதரம் மற்றும் குடும்ப மருத்துவர், ஸ்ரீ ஜோன் கோட்டலவெலா பாதுகாப்பு நிறுவனம், மருத்துவ பீடம்
5. வைத்தியர் பிரியங்கரா ஜெயவர்த்தன, வருகை மருத்துவர், பொது மருத்துவமனை , கொழும்பு
6. வைத்தியர் லக்மினி மாகொடரத்ன, பதில் பணிப்பாளர்/ போசாக்கப் பிரிவு, சுகாதார அமைச்சு
7. வைத்தியர் அனேமா சி.எம். பஸ்நாயக்க, சமூக மருத்துவ ஆலோசகர், போசாக்குப் பிரிவு, சுகாதார அமைச்சு
8. வைத்தியர் யசோம குமாரி வீரசேகர, சமூக மருத்துவ ஆலோசகர், போசாக்குப் பிரிவு, சுகாதார அமைச்சு
9. வைத்தியர் பானுஜ வியதிலக, சமூக மருத்துவ ஆலோசகர், போசாக்குப் பிரிவு, சுகாதார அமைச்சு
10. வைத்தியர் ஷிரோமிமதுவேஜ், சமூக மருத்துவ ஆலோசகர், இளைஞர், முதியோர் மற்றும் ஊனமுற்றோர் பிரிவு, சுகாதார அமைச்சு
11. வைத்தியர் அமந்திபண்டுசேனா, சமூக மருத்துவ ஆலோசகர், பணிப்பாளர் குழுாம், தோட்டம் மற்றம் நகர சுகாதாரம்

12. திருமதி. வி. பஸ்குவல், சிரேஸ்ட பிரதி பணிப்பாளர், உணவு தர நியமங்கள், இலங்கை கட்டளைகள் நிறுவனம்
13. திரு. எம்.கே.ஆர்.யு. கிரிசாந்த, பிரதி பணிப்பாளர், முதியோருக்கான தேசிய செயலகம்
14. வைத்தியர் வேஜினி மல்லவராச்சி, தேசிய நிபுணத்துவ அலுவலர் - போசாக்கு, உலக சுகாதார அமைப்பு
15. வைத்தியர் எச். யகண்டவாலா, பணிப்பாளர் கிராமம் 60 பிளஸ்
16. வைத்தியர் ஹம்சானந்தி, முதன்மை பதிவாளர் - சமூக மருத்துவம், போசாக்கு பிரிவு, சுகாதார அமைச்சு
17. வைத்தியர் எம.பி. கமகே, முதன்மைப் பதிவாளர், போசாக்கு
18. வைத்தியர் தென்னக்கோன், முதன்மைப் பதிவாளர், போசாக்கு
19. வைத்தியர் சமந்தா விஜேவர்த்தன. பதிவாளர், சமூக மருத்துவம், போசாக்கு பிரிவு, சுகாதார அமைச்சு
20. வைத்தியர் சஜானி நதிகா, பதிவாளர், போசாக்கு பிரிவு, சுகாதார அமைச்சு
21. வைத்தியர் கனிஷ்க அத்துகோரல, பதிவாளர் - சமூக மருத்துவம், போசாக்கு பிரிவு, சுகாதார அமைச்சு
22. வைத்தியர் நிஷானி பொன்சேகா. பதிவாளர் - சமூக மருத்துவம், போசாக்கு பிரிவு, சுகாதார அமைச்சு
23. வைத்தியர் திலுஷா உடுகம, பதிவாளர் - சமூக மருத்துவம், போசாக்கு பிரிவு, சுகாதார அமைச்சு
24. வைத்தியர் எரங்க பதிரத்ன, மருத்துவ அதிகாரி, ஆதார வைத்தியசாலை, பாணந்தறை
25. வைத்தியர் எரந்தி வீரசேகர, மருத்துவ அதிகாரி, போசாக்கப் பிரிவு, சுகாதார அமைச்சு
26. வைத்தியர் நிபுனி அமரசேகர, மருத்துவ அதிகாரி, போசாக்கப் பிரிவு, சுகாதார அமைச்சு
27. வைத்தியர் அமில லியனகே, மருத்துவ அதிகாரி, போசாக்கப் பிரிவு, சுகாதார அமைச்சு
28. வைத்தியர் ஜினானி மஹிபால, மருத்துவ அதிகாரி, போசாக்கப் பிரிவு, சுகாதார அமைச்சு
29. வைத்தியர் சமீர யாபா அபேவர்த்தன, மருத்துவ அதிகாரி, போசாக்கப் பிரிவு, சுகாதார அமைச்சு
30. வைத்தியர் சௌமையா தர்சனி, பதிவாளர்- சமூக மருத்துவம்
31. வைத்தியர் ஒஷினி லியநாராச்சி, சமூக சுகாதாரப் பிரிவு ஆலோசகர், சர்வோதயா இயக்கம்
32. திரு. ஏ.எம். ஆசிரி, முதியோருக்கான தேசிய செயலகம்
33. திருமதி. பி.எஸ்.பி. பெர்ணாண்டோ, பொது சுகாதார தாதியர் அதிகாரி
34. திரு. எம். தர்மசீலன், உதவி பணிப்பாளர், போசாக்கு பிரிவு, சுகாதார அமைச்சு

35. திருமதி. ஆர்.எம்.எல்.ஆர். திலகரத்னே, போசாக்கு நிபுணர், சுகாதார அமைச்சு
36. எ.டி.டி.சி. அதவுடா, போசாக்கு நிபுணர், சுகாதார அமைச்சு
37. திருமதி சஜீவனி மிரிஹாகல்ல, அபிவிருத்தி உத்தியோகத்தர், பதிவு செய்யப்பட்ட போசாக்கு நிபுணர் (CMCC), போசாக்கு பிரிவு, சுகாதார அமைச்சு
38. திருமதி. சி.எஸ். இளங்கமஹே, திட்டமிடல் மற்றும் நிகழ்ச்சித்திட்ட உதவியாளர், போசாக்கு பிரிவு, சுகாதார அமைச்சு
39. திருமதி. ரி. சுந்தரவதனி. அபிவிருத்தி உத்தியோகத்தர், பதிவு செய்யப்பட்ட போசாக்கு நிபுணர் (CMCC), போசாக்கு பிரிவு, சுகாதார அமைச்சு
40. திருமதி தாரணிகுமாரி, அபிவிருத்தி உத்தியோகத்தர், போசாக்கு பிரிவு, சுகாதார அமைச்சு
41. திருமதி. நிரோசா சமன் குமாரி, அபிவிருத்தி உத்தியோகத்தர், போசாக்கு பிரிவு, சுகாதார அமைச்சு